**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையரின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.சு.சிவசுப்பிரமணியன்,பி.எஸ்,ஸி.,பி.எல்.,**

ந.க.எண்.எச்1/5097/2020(மையம்) நாள். 02.07.2020

பொருள்: குப்பைக் கிடங்கு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – பொது சுகாதாரப் பிரிவு – அரியமங்கலம் குப்பைக் கிடங்கு, தீ பரவாமல் தடுக்க குப்பைக் கிடங்கில் சுழற்சி முறையில் பணியாற்ற கோட்ட அலுவலகங்களுக்கு உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை: ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரை

-----

**உத்தரவு: :**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைக் கிடங்கில் தீ பரவாமல் தடுப்பதற்கும் அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் சுழற்சி முறையில் இணைப்பில் கண்டுள்ள விவரப்படி பணியாற்ற கோட்ட அலுவலகங்களுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரங்களில் சம்பந்தப்பட்ட கோட்ட அலுவலகங்களிலிருந்து ஒரு துப்புரவு ஆய்வர் மற்றும் தேவையான தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு பணியை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

மேலும் தீயை அணைக்க தேவைப்படும் அனைத்து வசதிகளையும் தயார் நிலையில் வைத்து பணி மேற்கொள்ள சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளருக்கு உத்தரவிடப்படுகிறது. மேற்படி பணியை கண்காணித்து தினசரி அறிக்கையினை ஆணையர் அவர்களுக்கு சமர்பிக்க உதவி செயற்பொறியாளர் (அரிய) மற்றும் உதவி ஆணையர் (அரிய) ஆகியோர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

–ஒப்பம்–
ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

**பெறுநர்**

1) அனைத்து சுகாதார ஆய்வர்கள்/சுகாதார அலுவலர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
2) இளநிலை பொறியாளர், வார்டு எண்.28, அரியமங்கலம் கோட்டம்.
3) உதவி செயற் பொறியாளர், அரியமங்கலம் கோட்டம்.
4) அனைத்து கோட்ட உதவி ஆணையர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

**நகல்**

1) மாநகர் நல அலுவலர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
2) நகரப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
3) ஆணையர் அவர்களின் மேஜைக்கு.

| வ. எண் | தேதி | நேரம் | பணியாற்ற வேண்டிய கோட்ட அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | திங்கள் | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | அரியமங்கலம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | பொன்மலை |
| 2 | செவ்வாய் | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | கோ.அபிஷேகபுரம் |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | அரியமங்கலம் |
| 3 | புதன் | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | பொன்மலை |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | கோ.அபிஷேகபுரம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |
| 4 | வியாழன் | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | அரியமங்கலம் |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | பொன்மலை |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | கோ.அபிஷேகபுரம் |
| 5 | வெள்ளி | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | அரியமங்கலம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | பொன்மலை |
| 6 | சனி | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | கோ.அபிஷேகபுரம் |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | அரியமங்கலம் |
| 7 | ஞாயிறு | காலை 6.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | பொன்மலை |
| | | மதியம் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | கோ.அபிஷேகபுரம் |
| | | இரவு 10.00 மணி முதல் காலை 06.00 மணி வரை | ஸ்ரீரங்கம் |

—ஒப்பம்—
ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.